**தலைப்பு - 415 - கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 முற்பணக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முற்பணக் கணக்கில் முற்பண பெறுவனவுகளின் பெறுமதி திறேசேரி புத்தகம் (SA-52) மற்றும் திணைக்களப் புத்தகம் (ACA-5) இன் பிரகாரம் ரூபா 15,957,813 ஆக இருந்த போதும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 17,662,990 ஆனமையால் ரூபா 1,705,177 அதிகரித்து நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | SA 52 இன் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 15,957,813 ஆக இருந்த போதும், SA 51 இன் பிரகாரம் பெப்ரவரி மாதத்தில் தலைப்பு 102 இன் மூலம் ரூபா 1,705,177 தொகை 415 தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் திறைசேரி புத்தகம் SA 52 இன் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகளின் பெறுமதி முற்பணப் பெறுவனவின் கீழ் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) முற்பணக் கணக்கில் முற்பண கொடுப்பனவின் பெறுமதி திறைசேரி புத்தகம் (SA-52) மற்றும் திணைக்களப் புத்தகம் (ACA-05) இன் பிரகாரம் ரூபா 15,724,284 ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 14,019,107 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 1,705,177 குறைத்து நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | நிதிச் செயலாற்றல் கூற்றில் திறைசேரி புத்தகம் SA 52 இன் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகளின் பெறுமதி முற்பண செலுத்ததல்களின் கீழ் காண்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் வீடமைப்பு பிரிவினால் நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இழப்பு பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்காக தேவையான தகவல்கள் உரிய பிரிவின் மூலம் பெற்று மிகுதி நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் உள்ள படிவத்தின் படி இழப்பு தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

**கணக்காய்வு அவதானிப்பு**

| விபரம் | திறைசேரி புத்தகத்தின் பிரகாரம் SA 52 இன் பிரகாரம் பெறுமதி | அமைச்சு பரீட்சை மீதியின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| முற்பணப் பெறுவனவு | 15,957,813 | 11,114,091 | 4,893,722 |
| முற்பணக் கொடுப்பனவு | 15,724,284 | 12,313,930 | 3,410,354 |

அமைச்சின் பரீட்சை மீதியினை விட திறைசேரி SA 52 இல் அதிகரித்து காண்பிக்கப்பட்டுள்ள முற்பண பெறுவனவு ரூபா 4,843,722 தொகை கட்டுநிதி இணக்கக்கூற்றில் சேர்த்தலாக காண்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அமைச்சின் பரீட்சை மீதியினை விட திறைசேரி புத்தகம் SA 52 இல் அதிகரித்து குறிப்பிடப்பட்டுள்ள முற்பண கொடுப்பனவுகளின் பெறுமதியான ரூபா 3,410,354 தொகை கட்டுநிதி இணக்கக்கூற்றில் குறைக்கப்படல் வேண்டும். எனினும், கட்டுநிதி இணக்கக்கூற்றில் ஏனைய தலைப்பிற்காக அறிக்கையிட்ட நிறுவனத்தினால் முற்பண ''பீ'' கணக்கிற்காக செய்யப்பட்ட வரவு வைத்தலாக ரூபா 6,548,898 சேர்க்கப்பட்டு ஏனைய தலைப்புக்களினால் முற்பணம் ''பீ'' கணக்கில் மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தலாக ரூபா 1,705,177 குறைக்கப்பட்டிருந்தது.

**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள முற்பண பெறுவனவுகள் மற்றும் முற்பண கொடுப்பனவு பெறுமதி SA52 உடன் இணக்கம் செய்யும் போது ரூபா 1,705,177 தொகை முறையே அதிகரித்து மற்றும் குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் SA 51 இன் பிரகாரம் அதாவது ஏனைய தலைப்பு ஊடாக எமது தலைப்பிற்கு மாற்றப்பட்ட வரவு மற்றும் செலவு வைத்தலாக தலைப்பு 102 இன் மூலம் உரிய ரூபா 1,705,177 தொகை வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டுள்ளது.

**பரிந்துரை**

திறைசேரி SA 52 மற்றும் அமைச்சின் தலைப்பிற்குரிய பரீட்சை மீதிகளுக்கிடையே முற்பணப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு பெறுமதிகளின் வேறுபாடு கட்டுநிதி இணக்கக் கூற்றில் சீராக்கப்படல் வேண்டும்.

## 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 15 செலவின விடயங்களுககாக மீளாய்வாண்டில் ரூபா 339,168,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தொகையில் எந்தவொரு செலவினமும் ஆண்டில் செலவிடப்படாதிருந்ததுடன் மேலும் 32 செலவின விடயங்களில் தேவையினை விட 52 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு பிரயாணங்கள் தற்காலிகமாக கைவிடப்பட்டமை, தொற்றுநோய்களுக்கிடையே அலுவலகம் முழுமையான இயலளவில் இயங்காமை, தவறுதலாக தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் மூலம் நிதியேற்பாடு வழங்கியமை, செலவின வரையறை, மீள்குடியமர்த்தல் அலகு வீடமைப்புத்துறை அமைச்சுடன் இணைக்கப்பட்டதன் பின்னர் இந்த செலவினங்கள் எதிர்வுகூறப்பட்ட பிரகாரம் மேற்கொள்ளப்படாமை மற்றும் ஒப்பந்ததாரரால் செயற்திட்டங்கள் தாமதிக்கப்பட்டமை என்பவற்றின் காரணமாக இந்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | செலவினங்களை தெளிவாக இனங்கண்டு தேவைகளின் பிரகாரம் நிதியேற்பாட்டை ஒதுக்குதல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் விடயத்திற்கு உரித்தற்ற மரதகஹமூல அரிசி விற்பனை செய்யும் 115 வியாபார கொட்டைகளை நிர்மாணிப்பதற்காக அமைச்சின் செலவின விடய இலக்கம் 2-4-65-2506/11 இற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 37,150,000 ஒதுக்கப்பட்டு அந்த தொகையில் ரூபா 32,125,058 செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் ஒதுக்கப்பட்டிருந்த தொகையில் 14 சதவீதம் அதாவது ரூபா 5,024,942 சேமிக்கப்பட்டிருந்தது. | அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் அமைச்சின் மூலம் உரிய செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவிற்காக ரூபா 32,125,058 தொகைக்காக மாத்திரமே பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் செலவின விடயங்களுக்குரிய செலவினங்களை தெளிவாக இனங்கண்டு தேவையின் பிரகாரம் நிதியேற்பாடுகளை ஒதுக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் 03 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் 61 சதவீதத்திற்கும் 70 சதவீதத்திற்கும் இடையிலான அளவில் நிதிப்பிரமாணம் 66 நிதியேற்பாடு மாற்றப்பட்டதன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்தது. | தொற்றுநோய் காலத்தில் ஆகக்கூடிய இயலளவில் அலுவலக வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, மீள்குடியமர்த்தும் பிரிவிற்கு நியமிக்கப்பட்ட புதிய உத்தியோகத்தர்களின் காரணமாக அந்த கட்டிடத்தை திருத்துவதற்கு ஏற்பட்டமையும், தொற்றுநோய் காலத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படாமையின் காரணமாகவும் இந்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | செலவினங்களை தெளிவாக இனங்கண்டு தேவையின் பிரகாரம் நிதியேற்பாட்டை ஒதுக்குதல் வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய | இந்த அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் ஆக்கபூர்வதான தன்மை அவ்வவ்போது மீளாய்வு செய்யப்படுவதுடன் இனங்காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக சுற்றறிக்கையின் மூலம் ஆலோசனை வழங்கி உரிய நிதிக் கட்டுப்பாட்டு முறைமையினை ஆக்கபூர்வமானதாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வுகள் எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | 2019 நவம்பர் 28 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிதிப்பிரமாணம் 880 இன் கீழ் பிணை வைக்க வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | பிணை வைக்காத உத்தியோகத்தர்களிடமிருந்து பிணையை அறவிடுவதற்காக உரிய கணக்கு திறக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைக்க வேண்டும். |
| (ஆ) | 2019 ஏப்ரல் 08 ஆந் திகதிய 02/2019 ஆம் இலக்க நிதி அமைச்சின் வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | பாலின சமூகத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட பாதீட்டிற்குரிய தகவல்களை சேகரித்தல் மற்றும் ஒவ்வொரு அமைச்சிற்கும் பாலின தன்மையின் அடிப்படையில் கேந்திர அலகுகளை தாபித்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 753,881 செலவினம் 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். உரிய பொறுப்புக்கள் கைவிடப்பட்டிருந்தன. | ஆண்டிற்குரிய சகல பொறுப்புக்கள், பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்குதல் வேண்டும். |

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பாக இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 199,673 கடன் மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடுவதற்கு காணப்பட்டதுடன் சேவையை கைவிட்டுச் சென்ற இன்னுமொரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 47,050 கடன் மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிட வேண்டியிருந்தது. | வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 34,460 கடன் மீதி ரூபா 5,000 வீதம் மாதாந்தம் செலுத்தப்படுகின்றது.<br>2011 ஆம் ஆண்டில் வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தருக்குரிய கடன் மீதியான ரூபா 117,690 தொகை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம்.<br>வேலை நீக்கத்திற்கு உட்பட்ட இன்னுமொரு உத்தியோகத்தரின் ரூபா 47,524 ஆன இடர் கடன் மீதி பிணையாளரிடமிருந்து ரூபா 1,680 வீதம் தவணையாக மாதாந்தம் அறவிடப்படுகின்றது.<br>சேவையை விட்டுச் சென்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரின் 2021.12.31 இல் உள்ளவாறான ரூபா 47,050 கடன் மீதி அறவிடப்படுகின்றது. | அறவிட வேண்டிய கடன் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

**கணக்காய்வு அவதானிப்பு**

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறை வேலையாக கீழே குறிப்பிடப்பட்ட வீடமைப்பு செயற்திட்டங்களின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற் திட்டம் | செலவிடப்பட்ட செலவினம் ரூபா. மில்லியன் | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | செயற்திட்டம் நிறுத்தப்பட்ட ஆண்டு | யன்னல் மட்டம் வரை பூர்த்தி செய்யப் பட்ட வீடுகள் | கூரை மட்டம் வரை பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் | கூரை பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் | முழுமை யாக பூர்த்தி செய்யப் பட்ட வீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| வட கிழக்கு வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் (புதிய) | 1,243 | 2019 | 02 | 3,923 | 900 | 662 | 432 |
| கிராம சக்தி மாதிரி கிராம நிகழ்ச்சித் திட்டம் (புதிய) | 367 | 2019 | 02 | 771 | 166 | 471 | 30 |
| கிராம சக்தி மாதிரி கிராம நிகழ்ச்சித் திட்டம் (தொடர் வேலை) | 599 | 2018 | 03 | 470 | 332 | 980 | 443 |
| வெலிஓயா வீடமைப்பு செயற்திட்டம் | 32 | 2019 | 02 | 80 | 35 | 27 | - |
| வெள்ளத்தினால் பாதிப்பிற்கு உட்பட்ட வீடுகளை அபிவிருத்தி | 530 | 2019 | 02 | 1,650 | 474 | 82 | - |

**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**

2015-2019 இல் அமுல்படுத்தப்பட்ட கிராம நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் முழுமையாக நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக 2020-2021 நிதியேற்பாடு ஒதுக்கப்படாதிருந்த துடன் அறவிடும் போக்கிலும் பொதுவாக வீடமைப்பு தேவை உள்ள நபர்களுக்காக மாத்திரம் தவணைப் பணமாக ரூபா 59.405 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. தொடர் வேலை மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தில் நலனாளிகளின் தவணைப் பணத்தை விடுவிப்பதற்காக மாவட்டங்களில் மாவட்ட இணைப்பு குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டு மாவட்ட மட்டத்தில் தேவையினை இனங்கண்டு கொள்வதற்கு தற்போது மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**பரிந்துரை**

தொடர் வேலையாக காணப்பட்ட வீடமைப்பு செயற் திட்டங்களின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செய்யும் வீடமைபப்பு நிகழ்ச்சித் திட்டம் | | | | | | | |
| விசிறி வீடமைப்பு அபிருத்தி செய்யும் செயற் திட்டம்(புதிய) | 87 | 2019 | 02 | 331 | 239 | 1,553 | 394 |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மிஹிந்து நிவஹன வீடமைப்பு செயற்திட்டம் | | |
| இந்த செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடாக ரூபா 750 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செய்யப்பட்ட செலவினம் ரூபா 196 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் 26 சதவீதமாகும். ஆண்டில் செயற்திட்டத்தின் மூலம் முழுமையாக 500 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 201 ஆகும். அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 40 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | நலனாளிகளை தெரிவு செய்யும் போது ஏற்பட்ட தாமதத்தினால் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்து அமுல்படுத்துதல் தாமதம் ஏற்பட்டமைக்கு காரணமாகும். எனினும் 2021 ஆம் ஆண்டில் 758 வீட்டு அலகுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் செய்யப்பட்ட செலவினம் ரூபா 196 மில்லியன் ஆகும். இந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 201 ஆகும். | குறித்துரைத்த காலப்பகுதி காலத்தில் செயற்திட்டத்தை நிறைவேற்று வதற்கு முடியுமான வகையில் திட்டங்கள் தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) மாதிரிக் கிராம வீடமைப்பு செயற்திட்டம் 2019 (தொடர் வேலை) (கடன்) | | |

| | | | |
|---|---|---|---|
| | இந்த தொடர் வேலை வீடமைப்பு செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடாக ரூபா 172 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 55 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதிசார் செயல் முன்னேற்றம் 32 சதவீதம் மாத்திரமாகும். செயற்திட்டத்தில் தொடர் வேலையாக காணப்பட்ட 1,720 வீட்டு அலகுகளை இந்த ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 395 மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் பௌதீக செயல் முன்னேற்றம் 23 சதவீதம் ஆகும். இந்த செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் தாமத காலங்கள் 02 வருடங்கள் ஆகும். | இந்த தொடர் வேலை வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் ரூபா 59,405 மில்லியன் தொகை நலனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. | இலக்கிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (இ) | சாஞ்சி ஆராய்ச்சிவத்த வீடமைப்பு திருத்துதல் செயற்திட்டம்<br>---------------------------------------------- | | |
| | இந்த செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடாக ரூபா 68 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்திற்காக ஆண்டில் எந்தவொரு செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 10 | இந்த வீடுகளை திருத்துவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 85 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 30 மில்லியன் 2019 ஆம் ஆண்டில் நகமு புரவர நிகழ்ச்சித் திட்டத்தின் மிகுதி நிதியேற்பாடுகளில் இருந்தும், ரூபா 55 மில்லியன் 2021 ஆம் ஆண்டின் நிதியேற்பாட்டின் மூலமும் வழங்கப்பட்டிருந்தது. | குறித்துரைத்த காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய செயற் திட்டத்திற்காக மாத்திரம் நிதியேற்பாட்டை ஒதுக்கி கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதமாக இருந்தது. | | |
| (ஈ) | எல்பிட்டிவல வீடமைப்பு உத்தேச திட்டத்தில் நீர்த்தாங்கி, மலப் போக்குவரத்து வழிகள் மற்றும் வடிகாண் முறைமையை திருத்துதல்<br>---------------------------------------------<br>2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 07 மில்லியன் ஆக இருந்ததுடன் செயல்முன்னேற்ற அறிக்கையின் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிசார் செயல்முன்னேற்றம் 64 சதவீதமாக இருந்த போதும் பெறப்பட்ட பௌதீக செயல்முன்னேற்றம் 25 சதவீதம் மாத்திரமாகும். | தற்போது வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | இலக்கிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (உ) | ஹிம்புட்டு உயன வீடமைப்பு உத்தேச திட்டத்தின் திருத்த நடவடிக்கைகள்<br>---------------------------------------------<br>இதற்காக 2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 20 மில்லியன் ஆக இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயல் முன்னேற்ற அறிக்கையின் படி செய்யப்பட்ட செலவினம் ரூபா 19.5 மில்லியன் ஆக இருந்த போதும் எந்தவொரு பௌதீக செயல்முன்னேற்றமும் பெறப்பட்டிருக்கவில்லை. | இதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த மதிப்பீடு ரூபா 26 மில்லியன் ஆகும். பம்பிகளை உள்ளடக்கிய துணைப்பாகங்களின் விலைகள் விரைவாக உயர்வடைந்து சென்றமையால் புதிய மதிப்பீடொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நடவடிக்கை எடுத்தமையால் அது மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 100 மில்லியனில் ஒரு பகுதியும் ஈடுபடுத்தி அந்த பணிகளை | செயற்திட்டத்தின் நிதிசார் செயல் முன்னேற்றததற்கு ஒப்பாக பௌதீக செயல் முன்னேற்றம் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | |
| (ஊ) | கொழும்பு பிரதேசத்தில் வீடமைப்பு உத்தேச திட்டங்களின் நீர் பம்பிகளை பொருத்துதல் மற்றும் நீர்க் கூடங்களை திருத்தும் நடவடிக்கைகள்<br>---------------------------------------------<br>2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடாக ரூபா 05 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயல்முன்னேற்ற அறிக்கையின் படி ரூபா 05 மில்லியன் செலவினம் செய்யப்பட்டிருந்த போதும் எந்தவொரு பௌதீக செயல்முன்னேற்றமும் காண்பிக்கப்படவில்லை. | பெறுகை நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்த நிறுவனமொன்றை தெரிவு செய்து அப்பம்பிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3 மில்லியன் காசோலை எழுதப்பட்டிருந்த போதிலும் பம்பிகளின் விலைகள் அதிகரித்தமையின் அடிப்படையில் அந்த நிறுவனத்துடன் இணங்கப்பட்ட பெறுமதியில் பம்பிகளை வழங்குதல் நிராகரிக்கப்பட்டிருந்தது. பெறுகை நடைமுறைகளை பின்பற்றி மீண்டும் ஒப்பந்த நிறுவனமொன்றை தெரிவு செய்ய வேண்டியிருந்தது. | செயற்திட்டத்தின் நிதிசார் செயல் முன்னேற்றதற்கு ஒப்பாக பௌதீக செயல் முன்னேற்றம் பெறப்பட வேண்டும். |
| (எ) | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் செயற்திட்டம்<br>---------------------------------------------<br>2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடாக ரூபா 1,435 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டில் ரூபா 722 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | குறித்துரைத்த காலத்தில் செயற் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியமான வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிசார் செயல்முன்னேற்றம் 50 சதவீதமாக இருந்த போதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக செயல்முன்னேற்றம் 45 சதவீதமாக இருந்தது. | | திட்டங்களை தயாரித்தல் வேண்டும். |
| (ஏ) | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரச்சினைகளால் பாதிப்பிற்கு உட்பட்ட குடும்பங்களுக்காக பாரம்பரிய செங்கற்கள் மற்றும் மோட்டார் வாகன வகையில் நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம்<br>----------------------------------------------- | | |
| | இந்த செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 5,000 மில்லியனாக இருந்த போதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செய்யப்பட்ட செலவினம் ரூபா 3,746 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதிசார் செயல் முன்னேற்றம் 75 சதவீதம் ஆகும். செயற்திட்டத்திற்காக 5,953 வீடுகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 2,533 ஆக இருந்ததுடன் கூரை வரை 2,326 வீடுகளும், சுவர் மட்டம் வரை 142 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 60 சதவீதமாக மாத்திரம் இருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வீட்டு அலகுகள் 5,953 ஆக இருந்த போதும், முழுமையாக 2,533 வீடுகளையே பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. கூரை மட்டம் வரை 2,326 வீடுகளும், சுவர் மட்டம் வரை 896 வீடுகளும், அத்திவார மட்டும் வரை 142 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டின் போது நாட்டில் பரவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையினால் பல்வேறு வரையறைகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டியேற்பட்டமை மற்றும் கடந்த காலத்தில் விரைவாக பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் உயர்வடைந்து சென்றமையால் சில மூலப்பொருட்கள் (சீமெந்து போன்ற) வழங்குவதில் கஷ்ட நிலை தோன்றியிருந்தது. அதற்கு மேலதிகமாக மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்படுகின்ற நிதியேற்பாடுகளுக்காக போதியளவான கட்டுநிதி கிடைக்கப் பெறாமையின் | குறித்துரைத்த காலத்தில் செயற் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியுமான வகையில் திட்டங்களை தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணமாக ரூபா 1,173 மில்லியன் செலுத்துவதற்கு முடியாதிருந்தது. | |
| (ஐ) | வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரச்சினைகளினால் பாதிப்பிற்கு உட்பட்ட குடும்பங்களுக்காக புதிய தொழில்நுட்ப கிரயத்தில் பயனுள்ள நிரந்தர வீடுகளை நிர்மாணித்தல் | | |
| | இந்த செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 400 மில்லியன் ஆக இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செய்யப்பட்ட செலவினம் ரூபா 03 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதிசார் செயல்முன்னேற்றம் 01 சதவீதமாக இருந்தது. செயற்திட்டத்திற்காக 300 வீடுகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 12 மாத்திரமாகும். | ஏற்றுக்கொள்கின்றோம். கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் இந்த வீடுகளை நிர்மாணிக்கும் முறை புதிய தொழில்நுட்பம் மற்றும் அனுபவம் இல்லாமல் செய்ய வேண்டிய பொது நிலைமையாக இருந்தமையினால் அதிலுள்ள குறைபாடுகள், தொழில்நுட்ப வழுக்களை மாற்றியமைத்து மீண்டும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அமுல்படுத்திச் செல்லும் போது ஏற்பட்ட தாமதமாகும். | குறித்துரைத்த காலத்தில் செயற் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியுமான வகையில் திட்டங்களை தயாரித்தல் வேண்டும். |

## 3.3 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்திய நிதி உதவியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற மாலுவாவே சோபித தேரர் வீடமைப்பு செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது அந்த செயற்திட்டத்தின் நிர்மாண | ஒப்பந்த கம்பனியின் நிதி முகாமைத்துவ பிரச்சினையின் காரணமாக நிர்மாணத்தின் செயல்முன்னேற்றம் மிகவும் நலிவாக இருந்தமையால் ஒப்பந்த உடன்படிக்கை 2019.11.12 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தை அழைத்து | இலக்கிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்காக இதுவரை செய்யப்பட்ட செலவினம் ரூபா 47 மில்லியன் ஆக இருந்த போதும் பௌதீக செயல்முன்னேற்றம் 30 சதவீதமாக இருந்தமை அமைச்சின் 2020 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | (CECB) மிகுதி வேலைகளின் பகுதியை நிறைவேற்றுவதற்கு 2020.03.18 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்று உடன்படிக்கை கைச்சாத்திட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

(ஆ) இந்தியன் நிதியுதவியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற ஏனைய 04 செயற்திட்டங்களின் அமைச்சின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயல் முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

| செயற்திட்டம் | செயற்திட்டக் கால எல்லை | செயற்திட்டத்தின் நிதி பெறுமதி ரூபா. மில்லியன் | செய்யப்பட்டுள்ள செலவினம் ரூபா. மில்லியன் | வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| நாடளாவிய ரீதியில் மாதிரி கிராம செயற்திட்டம் | 2017-2020 | 300 | 265 | 600 | 340 |
| தென் மாகாண மாதிரி கிராம செயற்திட்டம் I | 2017-2020 | 300 | 183 | 600 | 40 |
| வட மாகாண மாதிரி கிராம செயற்திட்டம் I | 2018-2021 | 300 | 94 | 278 | 58 |
| தென் மாகாண மாதிரி கிராம செயற்திட்டம் II | 2018-2021 | 300 | 66 | 519 | 1 |

இதன் பிரகாரம் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

## 3.4 எதிர்பார்த்த நோக்கங்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீள்குடியர்த்தல் பிரிவில் 2021 ஆம் ஆண்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட பின்தொடர் அறிக்கைகளின் பிரகாரம் மட்டக்களப்பு பிரதேச செயலகப் பிரிவிற்குரிய அயன்திமலைக் கிராம உத்தியோகத்தர் பிரிவில் முன்னைய ஆண்டில் அமைச்சின் நிதியேற்பாடுகளில் ரூபா 68 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட அரிசி தயாரிக்கும் நிலையத்தின் சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் அரிசி தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் நிதியேற்பாட்டை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அந்த ஆண்டில் ரூபா 68 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2021.02.08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அந்த அரிசி தயாரிக்கும் நிலையத்தை பூர்த்திசெய்வதற்காக அரிசி அவிக்கும் இயந்திரம் மற்றும் உலர்தும் இயந்திரம் வழங்க வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் அதற்காக போதியளவான நிதியேற்பாடு அமைச்சிற்கு சொந்தமாக காணப்படாதிருந்தமையால் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | திறைசேரி ஏற்பாட்டு நிதியை செலவிட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்திட்டம், எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) மரதகஹமுல்ல அரிசி களஞ்சியத் தொகுதிக்கு இணைந்ததாக அரிசி விற்பனை செய்யும் 115 விற்பனை கொட்டகைகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2014 செப்தெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்களுக்கு அண்மித்த காலமாக இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் 2020 திசெம்பர் இந்த அமைச்சின் | 2014 திசெம்பர் மாதத்தின் பின்னர் இந்த செயற் திட்டத்திற்காக உரிமையினை கோருவதற்கு எந்தவொரு அமைச்சோ அல்லது நிறுவனமோ காணப்படாமையால் 05 வருட காலமாக நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. 2020.02.12 ஆந் திகதி சனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த செயற்திட்டத்தின் | குறித்துரைத்த காலப்பகுதியில் செயற்திட்டத்தின் நிர்மாணங்களை பூர்த்தி செய்து உரிய பணிகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதியேற்பாட்டு பணத்தை ஈடுபடுத்தி அது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டு முதல் இதுவரை செயற்திட்ட செலவினமாக ரூபா 135,975,907 செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இதுவரையில் 07 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை பூர்த்தி செய்யாமையால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | மிகுதி வேலை செயற்பாடுகளுக்கான பொறுப்புக்கள் இந்த அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகளில் 99 சதவீத அளவு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | |

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் மீள்குடியமர்த்தல் பிரிவின் மூலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள்குடியமர்த்தும் செயற்பாடுகளுக்குரிய பின்தொடர் நடவடிக்கையின் பிரகாரம் மீள்குடியமர்த்தும் நடைமுறையின் செயற்பாடுகளில் ஆரம்ப மற்றும் அத்தியவசியமான குடியிருப்புக்களுக்காக பொருத்தமான வீடொன்றை வழங்குவதற்கோ அல்லது வீடொன்றை நிர்மாணிக்க முடியாத சந்தர்ப்பங்களின் போது மலசல கூடங்கள் நிர்மாணித்தலோ போன்ற உப தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்த மலசல கூடத்தை பயன்படுத்தாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டமையால் நலனாளிகளுக்கு பயன்படுத்த | தற்காலிக வீடுகள் வழங்கிய குடும்பங்களுக்காக நிரந்தர வீடுகளை வழங்குதல் நீண்டகாலமாக தாமதமான சந்தர்ப்பங்களின் போது அவர்களின் தேவைக்காக பிற இடங்களுக்கு அல்லது உறவினர்களிடம் செல்லும் சந்தர்ப்பங்களின் போது தற்காலிக வீடுகள் மற்றும் சுகாதாரமுள்ள அலகுகளை பயன்படுத்த முடியாதிருந்ததுடன் அவர்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்கும் வரை இந்த நிலைமையை காணக்கூடியதாக இருந்தது. | அரசாங்கத்தின் நிதியத்தை பயனற்ற பணிகளுக்காக ஈடுபடுத்தா திருத்தல் வேண்டும். |

முடியாதிருந்தமை மற்றும் திறைசேரி நிதியம் வீணாக்கப்பட்டிருந்தமை என்பன அவதானிக்கப்பட்டது.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சுக்கு சொந்தமான 09 வாகனங்கள் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த வாகனம் இதுவரை இந்த அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. இலக்கம் WPKA-0002 ஆம் இலக்க டொயட்டா லான்ஸ் குரூசர் வண்டி புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயக பணியகத்திற்கு 2021 சனவரி 01 ஆந் திகதி முதல் வழங்கப்பட்டிருந்தது. | இலக்கம் WP KA-0002 என்ற டொயட்டா லேன்ஸ் குரூசர் ஜீப் வண்டிமீள் குடியமர்த்தல் பிரிவினால் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் பபணியகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | இந்த வாகனம் அமைச்சிற்கு மீள பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | குத்தகை முறையின் கீழ் ரூபா 2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட CAF 4619 என்ற ஜீப் வண்டி மற்றும் PG 1773 ஆம் இலக்க டபள் கப் வண்டி என்பன விவசாய அமைச்சின் ஓட்ட நடவடிக்கைகளுக்காக பெறப்பட்டிருந்ததுடன் அந்த இரண்டு வாகனங்களும் இந்த அமைச்சிற்கு இதுவரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தால் இந்த அமைச்சின் CAF 4619 ஜீப் வண்டி மற்றும் PG 1773 டபள் கப் வண்டி என்பவற்றிற்கு குத்தகை முடிவடைந்திருந்தமை எழுத்து மூலம் அறிவிக்கப்படாதிருந்தமையால் உரிய வாகனம் இந்த அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | இந்த வாகனங்கள் அமைச்சிற்கு கையேற்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) அமைச்சின் மீள் குடியமர்த்தல் பிரிவிற்குரிய விளைவற்றதாக காணப்பட்ட 03 வாகனங்களையும் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இந்த வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 நட்டம் மற்றும் இழப்புக்கள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த ஆண்டில் பதிவழிக்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 640,361 ஆன 09 வாகன விபத்துக்களின் நட்டங்கள் மற்றும் இழப்புக்கள், நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் பதிவழிக்கப்படாதிருந்த துடன் அந்த மீதி இந்த ஆண்டின் கணக்குகளில் நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த விடயத்தின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இழப்பு மற்றும் நட்டங்களை எதிர்காலத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிவழிக்கப்படாத நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் கணக்குளில் நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றிற்கு கொண்டுவரல் வேண்டும். |
| (ஆ) 02 வாகனங்களுக்குரிய ரூபா 352,017 தொகையான இழப்பு மற்றும் நட்டங்கள் மீள்குடியமர்த்தல் பிரிவில் நட்டம் மற்றும் இழப்பு பதிவேட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நட்டம் மற்றும் இழப்பு பதிவேட்டின் பிரகாரம் இழப்பு மற்றும் நட்டம் கணக்குகளில் சரிசெய்யப்படல் வேண்டும். |
| (இ) வீடமைப்பு பிரிவின் வாகன விபத்து பதிவேட்டின் பிரகாரம் CAB 8793 என்ற வாகனம் 2021 சனவரி 30 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டதன் அடிப்படையில் காப்புறுதியிலிருந்து மேவுகை செய்யப்படாத | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த விடயத்தின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நட்டங்கள் மற்றும் இழப்புக்களை எதிர்காலத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காப்புறுதி யிலிருந்து மேவுகை செய்யப்படாத வாகன விபத்துக்களில் ஏற்பட்ட நட்ட இழப்புக்கள் |

| | | |
|---|---|---|
| ரூபா 24,239 நட்டம் அமைச்சின் இழப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்த துடன் மீளாய்வாண்டின் கணக்குகளில் நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை | | மற்றும் நட்டப் பதிவேட்டிற்கும் மற்றும் கணக்குகளில் நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றிற்கு கொண்டு வரப்படல் வேண்டும். |

## 3.8 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்குரிய அமைச்சின் செலவின விடயத்தின் கீழ் ரூபா 4,539,450,363 செலவினம் ஒன்று வடக்கு கிழக்கு மாகாண மாவட்ட செயலகம் ஊடாக செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த நிதியிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டதா என பின்தொடர் நடவடிக்கைகள் செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த செலவினங்கள் அமைச்சின் மொத்த செலவினத்தில் 34 சதவீதமாகும். | செயற்திட்டத்தை ஆரம்பித்தது முதல் மாதாந்தம், மும்மாதம் மற்றும் அரையாண்டு மற்றும் வருடாந்த ரீதியில் அந்த செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் செயல் முன்னேற்றம் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்குரிய உத்தியோகத்தர்களின் பங்குபற்றலில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. | அமைச்சு வழங்கியுள்ள பணத்தை எதிர்பார்த்த நோக்கங் களுக்காக செலவிடப்பட்டதா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) 2018 இன் வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் 1972 இன் 07 ஆம் இலக்க வீட்டு வாடகை சட்டம் திருத்தப்பட வேண்டியிருந்த போதும் இதுவரை அந்த | 2021.09.27 ஆந் திகதிய அமப/21/1693/330/102 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் நீதி அமைச்சிற்கு வீட்டு வாடகை சட்டத்தை திருத்தும் பொறுப்பு | இந்த சட்டத்தை விரைவாக திருத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டம் திருத்தப்பட்டிருக்க வில்லை. எடுக்கப்பட்ட காலம் 03 வருடங்கள் ஆகும். | கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும் அந்த அமைச்சினால் வீட்டு வாடகை சட்டத்தை திருத்துதல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் அது தொடர்பான ஆவணங்கள் நீதி அமைச்சிற்கு பிரதியுடன் சட்ட வரைவு வழங்கல் திணைக்களத்திற்கு 2022.03.22 ஆந் திகதி கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (இ) | 2017 யூலை 24 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அரசாங்க நிறுவனங்கள் அமைச்சின் நிலையான தொழில்நுட்ப குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்ட 17 ஒப்பந்தங்களுக்காக 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மதிப்பீடு செய்து அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அந்த ஒப்பந்தங்களிலிருந்து மேலும் அங்கீகாரத்தை வழங்குவதற்கு 17 ஒப்பந்தங்களுக்காக மாத்திரமே முடியுமாக இருந்ததுடன் மிகுதி ஒப்பந்தங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | நிலையான தொழில்நுட்ப குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளுதல் தாமதமின்றி மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஈ) | வீடமைப்பு உத்தேசத் திட்டத்தின் கீழ் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள 64 தனியார் காணிகளின் எண்ணிக்கைக்கு பணம் செலுத்தி கையேற்கப்பட வேண்டியிருந்தது. 2019 ஆம் ஆண்டில் 09 காணிகளுக்காக இழப்பீடு மற்றும் வட்டிப் பணம் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் 06 காணிகளுக்காக இழப்பீட்டிற்குரிய வட்டி மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. | ஒவ்வொரு ஆண்டிலும் செலுத்த வேண்டிய இழப்பீடுகள் மற்றும் வட்டிப் பணம் உரிய பிரதேச செயலாளர்களினால் அறிவித்து அனுப்பப்பட்டதன் பின்னர் அந்த ஆண்டிற்கு கிடைத்துள்ள திறைசேரி நிதியேற்பாடுகளின் மூலம் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. அதனிடையே உரித்தினை பரீட்சிக்கும் செயற்பாடுகளை விரைவுபடுத்தி அதிக காணிகளின் எண்ணிக்கைக்காக இழப்பீடுகள் மற்றும் வட்டிப் பணத்தை அறிவித்து அனுப்புமாறு உரிய பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய தரப்பினருக்கு இழப்பீட்டை செலுத்தி விரைவாக காணிகள் கையேற்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அரசாங்க தொழிற்சாலையின் மீள்கட்டமைப்பிற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. எடுக்கப்பட்ட காலம் 03 வருடங்கள் ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து அந்த அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தை மீள்கட்டமைத்தல் வேண்டும். |

**4. நல்லாளுகை**

---------------------

**4.1 பொதுமக்களுக்கு சேவை வழங்குதல்**

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 20 வருடங்களுக்கு முன்னர் கைப்பற்றி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிகளுக்காக உரிய காணி உரிமையாளர்களுக்கு இழப்பீட்டு பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | அந்தக் காணிகளின் உரித்தினை விரைவாக கையேற்று வீடுகளை முறையாக நிர்மாணித்து நபர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். உரித்தை உறுதிப்படுத்துவதற்காக உரித்தினை பரீட்சிப்பதற்கு உரிமையாளர்கள் முன்வராமையின் அடிப்படையில் இழப்பீட்டு பணம் செலுத்தி முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. மேலும் பிரதேச செயலகங்களில் காணப்படுகின்ற செயற்திறனின்மைகளும் இதற்கு தாக்கமளித்திருந்ததையும் குறிப்பிட வேண்டும். எனினும் இந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு ஒவ்வொரு கோவைகளிலும் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பப்பட்டுள்ளது. | இழப்பீட்டு பணம் கோரப்படுமிடத்து அது தொடர்பாக பரீட்சித்து செலுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) தனியார் மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகள் கையேற்கப்படாமல் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வீட்டு நலனாளிகள் குடியமர்த்தப்பட்ட போதிலும் அந்த குடியிருப்பாளர்களுக்கு உரித்துறுதி வழங்குதல் தாமதமடைந்ததன் காரணமாக வீடுகளின் சட்டரீதியான உரித்து வழங்கப்பட்டிருக்கவில்லை | மேற்கூறப்பட்ட முறையில் குடியமர்த்தப்பட்ட வீட்டு திட்டங்களின் காணிகள் கையளிக்கப்பட்டதன் பின்னர் உரித்துறுதியை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும். எனினும், புலமைச் சொத்துக்கள் கையளிக்கப்பட்டதன் பின்னர் புலமைச் சொத்து வரைபடம் தயாரித்தல் புலமைச் சொத்து வெளியீடு தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் உரித்துறுதியை வழங்குதல் மேற்கொள்ளப்படும். | குடியிருக்கும் வீட்டு நலனாளிகளுக்கு உரித்துறுதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**5. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 345 ஆக இருந்ததுடன் உள்ளபடியான எண்ணிக்கை 261 ஆகும். அதன் பிரகாரம் வெற்றிடமாக காணப்படுகின்ற பதவிகளின் எண்ணிக்கை 84 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சேவைத் தேவையினை கருத்தில் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |